Source: *Tamil Murasu*, p3
Date: 1 August 2015

# திமிங்கிலத்தின் எலும்புகளைக் காட்சிப்படுத்த நிதி கோரும் அரும்பொருளகம்

சிங்கப்பூரில் கரையொதுங்கிய 'ஸ்பெர்ம்' வகை திமிங்கிலத்தின் எலும்புகளைப் பதப்படுத்தி பத்திரப்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

லீ கோங் சியன் இயற்கை வரலாற்று அரும்பொருளகத்தில் இந்தத் திமிங்கிலத்தைக் காட்சிப் படுத்துவதற்கு சுமார் $1 மில்லியன் வரை செலவாகும் என அரும்பொருளக ஊழியர் ஒருவர் தெரிவித்தார்.

திமிங்கிலத்தின் எலும்புகளைப் பராமரிப்பதற்கும் அது தொடர்பான கல்வி, ஆய்வு முயற்சிகளுக்கு ஆதரவளிக்கவும் இந்த நிதி பயன்படுத்தப்படலாம்.

'எக்ஸ்பாண்ட் கன்ஸ்ட்ரக்ஷன்' நிறுவனம் இந்தப் பணிக்காக $50,000 நிதி வழங்கியுள்ளது.

லீ கோங் சியன் இயற்கை வரலாற்று அரும்பொருளகத்தின் கௌரவ ஆராய்ச்சியாளரான திரு ஜோசஃப் கோ, அவரது மனைவி கோ பெய் ஃபென் ஆகியோரும் நிதி வழங்கியுள்ளனர்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.